இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 18.02.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் யானைகள் வழக்கம் போல் நடைபயிற்சி மேற்கொண்டு, பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி, காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள் உண்டு, தத்தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின.

பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன், உடலுக்கு மருத்துவர் ஆலோசனையின்படி வலுவூட்டும் சத்து மாத்திரைகள், கேரட், பேரீட்சை, பீட்ரூட் மற்றும் அவல் ஆகியவற்றை உட்கொண்டு யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து, நீராடி, தத்தம் இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.









